# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 1044/2016/ந

ஆணை எண்: 175/2017

நாள்: 29/06/2017

திரு. வை. பசவராஜ்,
மடாதிபதி & டிரஸ்டி திருபாற்கடல் (எ)
குருநமசிவாய மூர்த்தி சுவாமிகள் மடம்,
சிதம்பரம்.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி,
மற்றும் பிறர்.

– எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. வை. பசவராஜ் அவர்களது 03.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு 08.10.2016 அன்று வரப்பெற்று இம்முறைமன்ற நடுவத்தில் எண்.1044/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறான புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

(i) நகராட்சி சட்ட விதிகளுக்கு முரணாக சிதம்பரம் நகராட்சி வார்டு 3, பிளாக் 4 T.S.215 குரு நமச்சிவாயர் மடத்து இடத்திலுள்ள நான்கு கோவில்களுக்கு நடுவிலும், ஒட்டியும்

எந்தவிதமான நகராட்சி அனுமதியுமின்றி கையூட்டு பெற்றுக்கொண்டு நகராட்சி ஊழியர்கள் வீடு கட்ட அனுமதித்தது

(ii) நகராட்சி அனுமதி இன்றி வைப்புத் தொகை பெறாமல் கையூட்டு பெற்று T.S.215ல் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பை சட்டத்திற்கு புறம்பாக கொடுத்தது

(iii) சட்ட விரோத பாதாள சாக்கடை இணைப்பை மறைக்க நகராட்சிக்கு உரிமையில்லாத இடத்தில் (T.S.215) மடாதிபதி, வருவாய்த் துறை அனுமதி பெறாமல் கையூட்டு பெற்று சிமெண்ட் சாலை அமைத்தது

மேற்படி முறையீட்டு மனு மீதான பதிலறிக்கையினை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மு.ம.எண்.1044/16/ந நாள்:17.10.2016ல் சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், அழைப்பாணை எண்.1044/2016/ந நாள்:27.10.2016ன் படி 22.11.2016 அன்று முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி 22.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் கீழ்காணும் குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளார்.

"நகர அளவு எண்.213 முதல் 217 வரை மடத்திற்கு சொந்தமானது. மடத்தைச் சுற்றி உரிய அனுமதியின்றி கையூட்டு பெற்றுக்கொண்டு வீடுகள் கட்ட சட்டத்திற்கு புறம்பாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மடத்திற்கு சொந்தமான இடத்தில் நகராட்சியால் பாதாள சாக்கடை, வடிகால் சாக்கடை நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மறைப்பதற்காக சிமெண்ட் ரோடு போடப்பட்டுள்ளது. இவ்விடத்தில் 100 வீடுகள் உள்ளன குடியிருப்புகளுக்கு வைப்புத் தொகை இல்லாமல் லஞ்சம் பெற்றுக் கொண்டு இணைப்பு வழங்கப்பட்டதால் நகராட்சிக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டுள்ளது. வரி போடுவதற்காக ஆணையர் பெயரையும் சொல்லி வருவாய் ஆய்வாளர்

திரு. சரவணன் வீட்டிற்கு ரூ.5000/- வசூல் செய்கிறாரென நகராட்சி ஆணையருக்கு புகார் அனுப்பியது குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட புகார்கள் மட்டுமன்றி 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின்படி இம்முறைமன்ற நடுவரின் பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டாத சில புகார்கள் குறித்து முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.1044/2016/ந நாள்:25.11.2016ன்படி முறையீட்டு மனுதாரர் தரப்பிலான சாட்சியான திரு. மு. செங்குட்டுவன் என்பவர் 09.12.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். இதனிடையே முறையீட்டு மனுதாரர் தனது 29.11.2016 நாளிட்ட கடிதத்தில் எதிர்மனுதாரர்கள் முறைமன்ற நடுவத்தில் அளித்த வாக்குமூலங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை தனக்கு வழங்க வேண்டுமென கோரினார். இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.1044/2016/ந நாள்: 25.11.2016ன்படி எதிர்மனுதாரர்கள் 14.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகிட ஆணையிடப்பட்டது. மேலும் 22.11.2016 அன்று நடைபெற்ற விசாரணையின் போது மனுதாரரால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் மீதான கூடுதல் எதிர்வாதுரை/பதிலறிக்கையினையும் 14.12.2016 விசாரணையின்போது தாக்கல் செய்திடுமாறு எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பாணை அ.ம.எண்.1044/16/ந-2 நாள்:05/12/2016ல் ஆணையிடப்பட்டு மனுதாரரது வாக்குமூல நகலும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனிடையே 09.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரரது சாட்சி திரு. எம். செங்குட்டுவன் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்ட புகார்களை வலியுறுத்தி தனது வாக்குமூலத்தினை பதிவு செய்தார். நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 04.01.2016 தேதியிட்ட கடிதத்தில் எஸ். சரவணன் என்ற நபர் T.S.215-லுள்ள குரு நமசிவாயா மட இடத்தில் கட்டிட அனுமதி பெறாமல் 2 அடுக்கு மாடி கட்டிடம் கட்டினார் என்றும் அதனை அகற்ற WP. 21445/2015ல்

சொல்லப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி ஆணையரது அறிவிப்பு ந.க.எண்.2159/2014/எப்1 நாள்:22.08.14ன் நகலினை ஆதாரமாக தாக்கல் செய்தார். மேற்படி அறிவிப்பில் இரண்டு வீடுகளுக்கான பாதாள சாக்கடை இணைப்புகள் அனுமதி பெறாமல் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்து ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு அறிவிப்பு நகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளது. கடலூர் மாவட்ட ஆட்சி தலைவரது நே.மு.க.வி3/17810/13, நாள்: 07.10.2013ன் நகலினையும் சமர்ப்பித்தார். இக்கடிதம் சிதம்பரம் ஆட்சியருக்கும், சிதம்பரம் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர் (பொ)-க்கும் முகவரியிடப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் சிதம்பரம் நகரப் பகுதிக்குள் அமைந்துள்ள குளத்தில் ஆக்கிரமிப்பு மூலம் செய்யப்பட்டுள்ள கழிவு நீர்த் தொட்டிகளை உடனடியாக அகற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சில பத்திரிக்கை துணுக்குகள் மற்றும் புகைப்பட நகல்களையும் சமர்ப்பித்தார்.

14.12.2016 அன்று சமர்ப்பிக்கப்பட்ட சிதம்பரம் நகராட்சி ஆணையர் அவர்களது பதில் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்கள்/விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள T.S.எண்.213 முதல் 217 வரை உள்ள இடங்களில் T.S.எண்.215 அரசு புறம்போக்கு இடமாகும். அதேபோல் T.S.எண்216 என்பது ஒரு பொது குளமாகும். இதனை பொது மக்கள் வேண்டு கோள்படியும், உயர்நீதிமன்றம் குளத்தில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்க வேண்டும் என்ற சட்டக் கருத்தின் அடிப்படையிலும் தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டத்தின்படி (SSS) மாவட்ட ஆட்சியரின் உத்தரவு, வழிகாட்டுதலின்படி 75 சதவீதம் அரசு தொகை மற்றும் 25 சதவீதம் பொதுமக்கள் வசூல் மூலம் வைப்பு செய்யப்பட்ட தொகையை கொண்டு மேற்படி குளம் சரி செய்யப்பட்டது. மனுதாரருக்கு இதில் சம்பந்தம் இல்லை. T.S. எண்.215ல் எந்த மட்டமும் இல்லை. இது அரசு புறம்போக்கு இடம். அதில் சுமார் அரை

நூற்றாண்டுக்கும் மேலாக பல்வேறு நபர்கள் பரம்பரையாகவும் மற்றும் அவ்வப்போது மற்றவர்களிடம் குடியிருப்புக்கும் கொடுத்து வசித்து வருகின்றனர். T.S. எண்.213, 214 மற்றும் 217ல் சுமார் 50-க்கும் மேற்பட்ட மாடி குடியிருப்பு கட்டிடங்கள் அரை நூற்றாண்டுக்கு மேலாக (ஏற்கனவே குடிசை வீடுகள்) இருந்து வருகின்றன.

நகராட்சி அலுவலர்கள் மீது கூறப்பட்ட கையூட்டு புகார்களும் முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது. மேலும் T.S. எண்.215ல் வீட்டிற்கு மேற்கூரை வரி போட ரூ.5000/- வசூலிப்பதாக கூறப்படும் என செயலில் எவரும் ஈடுபடவில்லை என உறுதிபட மறுக்கப்பட்டுள்ளது. வேங்கான் தெருவில் க.எண்.40/90ல் உள்ள வீடு பல ஆண்டுகளாக இருப்பதால் வரி விதிப்பு விடுபட்டதாக எண்ணி வரி விதிப்பு செய்யப்பட்டதாகவும் பின்னர் ஆதாரம் இல்லாத நிலையில் வரி விதிப்பு நீக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைக் காலங்களில் மற்றும் வேறு சமயங்களில் சாலையில் நீர் தேங்கி நோய் பரவும் நிலை ஏற்பட்டதால் சிதம்பரம் நகர் மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு புகாரில் கூறப்பட்ட இடத்தில் 2015ல் சிமெண்ட் சாலை போடப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை உயர்நீதிமன்ற W.P. 21445/2015-ல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் கீழ் சன்னதியில் அருள்மிகு ஜி நடராஜர் ஆலயம் தொடர்பான வழக்காகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு. G. ரவிக்குமார், நகராட்சி உதவி பொறியாளர் தான் 3 ஆண்டுகளாக சிதம்பரம் நகராட்சியில் பணி புரிவதாகவும், தான் பணியில் அங்கு சேருவதற்கு முன்பே பாதாள சாக்கடை போடப்பட்டதெனவும் சாலை அமைத்த பணியும் தன்னால் செய்யப்படவில்லை புகாருக்கும் தனக்கும் சம்பந்தமில்லை எனத் தெரிவித்தார்.

விசாரணைக்கு அடுத்து ஆஜரான திரு. S. சரவணகுமார், உதவியாளர், தான் வருவாய் உதவியாளராக பணியாற்றியபோது 20.1.2015ல் மேற்கூரை வரியாக ஒரு வீட்டிற்கு வரி

போடப்பட்டதெனவும் 12.1.2016ல் ரத்து செய்யப்பட்டு விட்டதெனவும், புகாரில் கூறப்பட்ட மடத்தைச் சுற்றியுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் 200 வீடுகள் உள்ளதென்றும் 20 வீட்டிற்கு வரி கட்டப்பட்டு வருவதாகவும், ஆணையர் பெயரைச் சொல்லி யாரிடமும் எந்த பணமும் பெறவில்லை எனத் தெரிவித்தார்.

5-வது எதிர்மனுதாரர் திருமதி A. கனிமொழி என்பவர் தான் உதவியாளராக உள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் பொது தகவல் அலுவலர் அல்ல என்றும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்து தனக்குத் தெரியாது என்று வாக்குமூலம் அளித்தார்.

முறையீட்டு மனுதாரர் தனது 12.12.2016 நாளிட்ட கடிதத்துடன் புகாரில் குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக சில புகைப்படங்களை அனுப்பியுள்ளார். இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அமுஎண்.1044/16/ந நாள்: 23.12.2016 உடன், மனுதாரர் கேட்டுக் கொண்டவாறு மேற்குறிப்பிட்ட எதிர்மனுதாரர்களது பதிலறிக்கை வாக்குமூலங்களின் நகல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 26.12.2016 அன்று மனுதாரரிடமிருந்து வரப்பெற்ற மின்னஞ்சலில், சிதம்பரம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் திரு. அருள்செல்வன் தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்து புகாரினை திரும்பப் பெறும் வகையில் மிரட்டுவதாகவும் தகாத வார்த்தைகள் பேசியதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து விசாரித்திட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை (அமுஎண்.1044/16/ந-1 நாள்:29.12.2016ன்படி) அனுப்பப்பட்டது. அன்றைய தினம் தன்னால் வர இயலாத நிலை உள்ளதால் அவகாசம் வழங்க மனுதாரரால் கோரப்பட்டது. அக்கோரிக்கை ஏற்கப்பட்டு 08.02.2017க்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

10.01.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு. மு. அருள்செல்வன், நகரமைப்பு ஆய்வாளர் கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தை அளித்தார். "திரு. சரவணன் என்பவர் திரு. பசவராஜ் என்பவர் மீது ஒரு புகார் மனுவை நகராட்சி ஆணையரிடம் அளித்தார். திரு. சரவணன் என்பவரின்

மற்றொரு மனு மீது தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேட்கப்பட்ட தகவலுக்கு பதில் அளிப்பதற்காக திரு. பசவராஜை விசாரித்தேன். சம்பந்தப்பட்ட இடத்தினுடைய ஆவணத்தின் போட்டோ நகல் அவரிடம் கேட்டேன். மற்றபடி உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் நான் மிரட்டியதாக அவர் அளித்த புகார் தவறானது. நான் எந்த வகையிலும் அவருக்கு தொல்லை கொடுக்கவில்லை. அவர் வீட்டின் எதிரில் அவருடன் பேசினேன். அப்போது சர்வே உதவியாளர் திரு. தமிழ்செல்வமும் என்னோடு வந்திருந்தார். எந்த வாக்குவாதமும் திரு. பசவராஜிடம் செய்யவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்_"

மேற்கண்ட வாக்குமூலத்துடன் பிரம்மஸ்ரீ ந. சரவணன் சுவாமிகள், சிதம்பரம் என்பவர் நகராட்சி ஆணையருக்கு அளித்திருந்த 08.02.2016 மற்றும் 12.12.2016 நாளிட்ட (பெறப்பட்ட) இரு மனுக்களின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார். மேற்படி 08.02.2016 மனுவில் திரு. பசவராஜ் மற்றும் திரு. செங்குட்டுவன் ஆகியோர் மீது அற நிலையத் துறையில் பல புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில் தன்னை கத்தியால் தாக்கிய வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் அதற்கு பழிவாங்கும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலுக்கு நிலம் அரசால் கொடுக்கப்பட்டதெனவும் அந்த இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முறையீட்டு மனுதாரர் திரு. பசவராஜ் என்பவர் மீது அரசு நில விற்பனை குறித்து அறநிலையத்துறையில் வழக்கு உள்ளதெனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், 12.12.2016 நாளிட்ட மனுவில் வேங்கான் தெரு க.எண்.217ல் காமராஜ் மெட்ரிக் பள்ளி மற்றும் வீனஸ் பள்ளி, தில்லை நகர் ஆகியவை குறித்தும், வேங்கான் தெரு 213, 214 மற்றும் 215ல் உள்ள வீடுகள், பம்பாய் அம்மன் தோட்டம் தில்லையம்மன் கோவில் குளக்கரை எதிரில் பந்தல் ஒப்பந்தக்காரன் திரு. தங்கராசு என்பவரது வீடு, நடராஜ க்ருபா திருமண மண்டபம், வடக்கு

விதிமுனை வீடு ராகவேந்திரா அபார்ட்மெண்ட்ஸ் முன் வீடு ஆகியவற்றிற்கு நகராட்சி அனுமதி பெறப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பியுள்ளார்.

திரு. பசுவராஜ் முறையீட்டு மனுதாரரது பின்னாஞ்சல் புகார் விசாரணை குறித்து. 05.01.2017 நாளிட்ட அவரது கோரிக்கை மனு ஏற்கப்பட்டு. உரிய கால அவகாசம் அளித்து 08.02.2017 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். (அசல் மனு எண்.1044/2016/ந நாள்:18.01.2017). அவர் தனது வாக்குமூலத்தில் நகரமைப்பு ஆய்வாளர் திரு. அருள்செல்வன் தனது வீட்டின் வாசற்படியில் நின்று அவரது வீட்டிற்கு சொத்துவரி செலுத்தப்பட்டதா என்றும் கட்டிடம் முறைப்படி அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளதா என்றும் கேட்டு நாகரீகம் அற்ற முறையில் பேசியதாகவும் தெரிவித்துள்ளார். விவரங்கள் நகராட்சி ரெகார்டில் உள்ளதால் அதை பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து காவல் துறையில் புகார் ஏதும் கொடுக்கவில்ல என்றும் தெரிவித்துள்ளார். மேலும். நகராட்சி ஆணையரிடம் ஆக்கிரமிப்புகளை அகற்றித்தா கோரிய போது, வருவாய் துறையினரை அணுகி உத்திரவு பெற்று வருமாறு கூறியதால், சிதம்பரம் வட்டாட்சியரிடம் 12.12.2016 நாளிட்ட உத்தரவு கடிதம் பெறப்பட்டு நகராட்சி ஆணையரிடம் கொடுக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

வட்டாட்சியர் அளித்துள்ள கடிதத்தின் அடிப்படையில். அத்துமீறி கட்டப்பட்ட கட்டிடங்களையும், பாதான ஆக்கிரமைகளையும் அப்புறப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும். சிதம்பரம் வட்டாட்சியரது மாவட்ட வருவாய் அலுவலருக்கு முகவரியிட்ட 31.3.2015 நாளிட்ட கடிதத்தில் தனது மடத்தில் சொத்து விவரம் உள்ளதெனவும் தெரிவித்ததுடன் கூடுதலான எழுத்து பூர்வ வாதுரையையும் சமர்பித்தார்.

மனுதாரரது கூடுதல் வாதுரை மீதான பதிலறிக்கையினை தாக்கல் செய்யுமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு அ.ம.எண்.1044/16/ நாள்:15.02.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி, சிதம்பரம் நகராட்சி ஆணையரது 13.03.2017 நாளிட்ட பதிலறிக்கை 23.08.3017 அன்று முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. அதில் புகாரில் கூறப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி அபிவிருத்தி செய்யும் பணி தற்போது ஏதுமில்லை எனவும் இதனால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் நிலை உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. T.S.எண். 215ல் உள்ள இடம் அரசு புறம்போக்கு இடம் என்றும் T.S.எண். 216 என்பது திருப்பாற்கடல் குளம் என்றும் நகராட்சி பதிவேட்டிலுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

T.S.எண். 215ல் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளதெனவும் அதில் எத்தனை வீடுகளுக்கு நகராட்சி அனுமதி வழங்கப்பட்டுள்ளன போன்ற விபரங்கள் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள வரி விதிப்பு நீக்கத்தில் எந்த ஊழலும் நடைபெறவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொது மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதாரப் பணிகளின் பொருட்டே சிமெண்ட் சாலை மற்றும் பாதாள சாக்கடை அமைக்கப்பட்டுள்ளதெனவும் பொது மக்கள் மீதுள்ள விரோத மனப்பான்மை அடிப்படையில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் பகுதி முழுவதையும் அகற்றக் கூறுவது மனுதாரரது விரோதப் போக்கையும் மனிதாபிமானமற்ற செயலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகாரில் கூறப்பட்டுள்ள பகுதிகளில் எழுப்பப்பட்டுள்ள கட்டிடங்கள் பல ஆண்டுகளுக்கு மேற்பட்டவை என்பது வாக்குமூலங்கள், அறிக்கைகளின் மூலம் தெளிவாகிறது. நகராட்சி வரம்பிற்குட்பட்ட இடங்களில் அவ்வாறான நிகழ்வுகள் ஏற்பட்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்குமேயானால் அது குறித்து இம்முறைமன்ற நடுவ விசாரணைக்குட்படுத்தி உரிய ஆணைகள் பிறப்பிக்கலாம். முறையிட்டு மனுதாரர் தனிப்பட்ட தங்களது மடத்தின் நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோருவது தொடர்பாக சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை.

காவல் துறை மூலம் உரிய தீர்வு காணலாம். மேலும், அவர் தேவையெனக் கருதும் பட்சத்தில் நீதி மன்றத்தின் மூலமும் பரிகாரம் கோரலாம்.

சர்வே எண்.215 அரசு புறம்போக்கு நிலமென அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரளவை எண்.215-அரசு புறம்போக்கில் 23 நபர்கள் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதி பேராணை எண்.13669/2015-ல் 1.6.2015-அன்று உத்திரவிட்டப்படி, ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்த சிதம்பரம் வட்டாட்சியரால் நகராட்சி ஆணையருக்கு ந.க.அ1, 2217/2016/ 12.12.2016 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஆக்கிரமிப்புகள் குறித்து சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும், இவ்விடத்தில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை, நகராட்சி அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடங்கள்/விபரங்கள் நகராட்சியில் இல்லை எனக் கூறுவது ஏற்புடையதல்ல. வரி விதிப்பு விடுதலின்றி முறையாக நகராட்சிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டியது நகராட்சி ஆணையரது கடமையென சுட்டிக்காட்டி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

திரு. சரவணன் என்பவர் அளித்துள்ள புகார் மனுக்களில் குறிப்பிட்டுள்ள கட்டிங்களின் மீதான அனுமதி மற்றும் வரி விதிப்பு குறித்து முறையே ஆய்வு செய்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மனுதாரருக்கு பதிலளிக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

நகராட்சி அனுமதியற்ற கட்டிடங்கள், வரி விதிப்பு விவரங்கள் ஆகிய விவரங்களையும் ஆய்வு செய்து விடுபாடுகளின்றி சட்டப்படியான, விதிமுறைகளின்படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் உறுதி செய்வதுடன் புகாரில் கூறப்பட்டுள்ள பகுதிகளில் சாலை மற்றும் பாதாள சாக்கடை வசதிகள் செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு, மதிப்பீடு செலவினங்கள் இப்பணிகளுக்கான நகர்மன்ற தீர்மானங்கள் விதிமுறைகள்

பின்பற்றப்பட்டுள்ளனவா என்ற விவரங்களையும் ஆய்வு செய்து தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், இம்முறை மன்ற நடுவத்திற்கும் தாக்கல் செய்திடுமாறு செங்கற்பட்டு மண்டல. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 6 (4)(a) மற்றும் 12-ன் கீழ் ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு. அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

அ.
4.7.17

6/7/17

பெறுநர்

1) நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

2) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
செங்கற்பட்டு மண்டலம்.

3) நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.

4) திரு. வை. பசவராஜ்,
மடாதிபதி & டிரஸ்டி திருபாற்கடல் மடம்,
30/36, கா. கா. செ. பிள்ளை தெரு,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.